www.Padasalai.Net www.CBSEtips.in

Ts11T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022**

-----

**வகுப்பு 11**

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

**பகுதி - I**

குறிப்பு: i) **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

ii) **கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1) காவடி சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

2) பாயிரம் இல்லது ............. அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

3) பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுபறை ஈ) சிறுதேர்

4) அனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

5) வானம்பாடி கவிஞர்களுள் இவரும் ஒருவர் .............
அ) அப்துல் ரகுமான் ஆ) கவிப்பேரரசு வைரமுத்து இ) மேத்தா ஈ) சுரதா

6) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**
1) வெள்ளி வீதியார் - புறநானூறு
2) அண்ணாமலையார் - வாடிவாசல்
3) சி.சு. செல்லப்பா - குறுந்தொகை
4) இளம்பெருவழுதி - காவடிச்சிந்து

7) ஒப்புரவு என்பதன் பொருள் .............
அ) அடக்கமுடைமை ஆ) பண்புடைமை
இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

8) பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர்
அ) பேரணம்பட்டை ஆ) ஆலப்புழை இ) தென்காசி ஈ) புதுச்சேரி

9) வடகரை நாட்டில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை
அ) நாரை ஆ) தூக்கணாங்குருவி இ) கழுகு ஈ) உள்ளான் பறவை

10) ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
அ) அச்சம் ஆ) காய்ச்சல் இ) கப்பல் ஈ) தேர்தல்

11) சீறாப்புராணத்தின் ஆசிரியர்
அ) உமறுப்புலவர் ஆ) சீதக்காதி இ) கம்பர் ஈ) அம்மூவனார்

12) ஆஸ்கார் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
அ) ஏ.ஆர். ரகுமான் ஆ) பாரதிராஜா இ) சித்ரா ஈ) இளையராஜா

13) யானை டாக்டர் என்ற குறும்புதினத்தின் ஆசிரியர்
அ) ஜெயமோகன் ஆ) ஜானகிராமன் இ) சின்னப்பா ஈ) ஜெயராமன்

14) மகிழ்ச்சியின் மைந்தூறும் போழ்து ............. நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லோ உழவரை

**பகுதி - II**

**பிரிவு - 1**

குறிப்பு: **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15) ஏதிலிக் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

16) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் எனும் கூற்றினை நிறுவுக.

17) தமிழ்நாட்டின் மாநில மரம் எது? சிறுகுறிப்புத் தருக.

18) காவடிச் சிந்து என்பது யாது?

**பிரிவு - 2**

குறிப்பு: **எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

20) ''கணக்காயார்'' எனப்படுவோர் யாவர்?

21) 'தொழுஉரம்' என்றால் என்ன?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22) **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக:**
அ) முளைத்த ஆ) மலிந்த

23) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

24) **சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க:** வைகை

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



25) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:** பொரி, பொறி
26) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
அனைத்து துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
27) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**
அ) செங்கயல் ஆ) வருக
28) **இலக்கணக்குறிப்புத் தருக:**
அ) மூதூர் ஆ) ஆடுதல்
29) **தமிழாக்கம் தருக:** Health is wealth.
30) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடராக்குக:**
கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்.

## பகுதி - III
### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×4=8**
31) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
32) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெருமாள் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33) வாய்க்காலின் சிறப்புகளாக குறிப்பிடுவன யாவை?
34) ''சலச வாவியில் செங்கயல் பாயும்'' - **இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.**

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**
35) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதனை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
36) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளர் என்பதைப் பாடப்பகுதி வழியாக எடுத்துக்காட்டுக.
37) கற்றளிக் கோயில்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.
38) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**
39) உருவக அணி **அல்லது** உவமை அணியை விளக்குக.
40) **இலக்கிய நயம் பாராட்டுக:**
தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண்விழித்து நோக்க,
தென்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ''
- **கம்பர்**

சிவக்குமார். மு, பிராம் மெட்ரிக் மேநிப
வல்லம் - 627809
தென்காசி மாவட்டம்.

41) **கவிதை எழுதுக: (ஏதேனும் ஒன்றனுக்கு)**
அ) மேகம் ஆ) வறுமை
42) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் **(அல்லது)** பசுமரத்தாணி போல
43) **தமிழாக்கம் தருக:**
1. The Pen is mightier than the sword.
2. Winners don't do different things, they do things differently.
3. A picture is worth a thousand words.
4. Work while you work and play while you play.

## பகுதி - 4

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **3×6=18**
44) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை? **(அல்லது)**
இறைவனின் பெருமையை திருச்சாழல் மூலமாக வாசகர் வெளிப்படுத்தும் செய்திகளைத் தொகுக்க.
45) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க. **(அல்லது)**
காவடிச்சிந்து, ஒருவழிநடைப்பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.
46) 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**
47) அ) 'நான்' என்பாய் - எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடல்.
ஆ) 'இரந்து .........' - எனத் தொடங்கும் குறள்(ட்)பா.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com